# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**11,721 — 1959 අප්‍රේල් 9 වැනි බ්‍රහස්පතින්දා — 9.4.1959**

11,721 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு சித்திரை மாதம் 9 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (II) — விளம்பரங்கள்

## பரீட்சையும் பரீட்சைப் பெறுபேறுகளும்

எனது எண் : ஈபிஎ/35/57 (ii).

### ஆஸ்பத்திரி எழுதுவினைஞர் சேவைப் பரீட்சை—மார்ச், 1958

1958 ம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ந் திகதியைக் கொண்டதும் 1958 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 5 ம் திகதி வெளியான 11,608 ஆம் இலக்கத்தைக்கொண்ட அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது மான அறிவித்தல் தொடர்பாக, 1958 ம் ஆண்டு மார்ச் மாதம் நடை பெற்ற ஆஸ்பத்திரி எழுதுவினைஞர் சேவைப் பரீட்சையில் சித்தியெய்திய தன் காரணமாக கீழ்க்காணும் பரீட்சார்த்திகளும் ஆஸ்பத்திரி எழுது வினைஞர் சேவையின் இரண்டாம் வகுப்புக்கு நியமிக்கப்படுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்களென்பதை இத்தால் அறிவிக்கப்படுகிறது.

| பெயர் | விலாசம் |
|---|---|
| பார்னிஸ்ஹாமி, கே. எல். ஏ. .. | கிராமச் சங்கக் காரியாலயம், கண்டு கறபஹல, பன்விலரென்ன |
| சந்திரரத்ன, ஜே. எம். .. | உடதவ, யலதவல, வேவகம |
| டென்னி, கே. ஜீ. .. | அ/ஹொறவில, அரசினர் கலவன் பாடசாலை, ஹொறவில, அனுராத புரம் |
| தர்மசேன, ஏ. ஜீ. .. | மே. பா. டீ. பீ. பஸ்ரியான் சில்வா, கொணபினுவெல |
| பெர்னுந்து, பீ. பீ. .. | எண் 10, ஜனப்பிரிய வீதி, கொறல வெல்ல, மொறட்டுவ |
| ஜயசிங்க, என். ஆர். .. | தெஹிகஹஹென, நுகமுவ, யட்டி கலேலுவ |
| ஜயவீர, பீ. எம். .. | எண் 46/2, சிறிமங்கல வீதி, மாத்தறை |
| மஹிந்ததாச, கே. ஆர். .. | நிமலவவத்த, இமடுவ |
| பெரேரா, கே. டீ. .. | மெடித்தியவல, பண்டுறகொட |
| பியதாச, ஆர். ஜீ. .. | பெல்லப்பிற்றிய, உடஹன்ரென்ன |
| புண்ணியமூர்த்தி, கே. .. | எண் 505, பிரதான வீதி, மாத்தளை |
| இராசையா, எஸ். .. | புங்குடுதீவு மேற்கு, புங்குடுதீவு |
| செனிவரத்ன பண்டா, டீ. ஆர். | ரண்டிவெல பாடசாலை, மாவனெல்ல |
| வீரமன், பீ. .. | பெரலபனதார |
| வீரசிங்க, டீ. பீ. .. | பெரமடுள்ள, ஹிங்குல |

2. பரீட்சார்த்திகளுக்கு உடனடியாக வேலை கொடுப்பது அரசாங்கத்தி னுடைய பொறுப்பல்ல. எனினும், காலித்தானங்கள் ஏற்படும்பொழுது நியமனங்கள் வழங்கப்படும். சகல நியமனங்களும் 3 வருடங்களுக்குப் பரீட்சார்த்த நிலையிலிருக்கும். இவர்கள் ஒரு வைத்திய பரிசோதனைக்கும் ஆஸ்பத்திரி எழுதுவினைஞர் சேவை சம்பந்தமான சேவை நிபந்தனை களுக்கும் உட்படவேண்டியிருக்கும்.

டீ. எல். ஜே. கஹவிற்ற,
சௌக்கிய சேவை அதிபதி.

சௌக்கியப் பகுதி,
த. பெ. எண் 500,
கொழும்பு, மார்ச் 31, 1959.

---

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### நீர்ப்பாசனப் பகுதி

கண்டி மாவட்ட பகுதி நீர்ப்பாசன அதிபர் 22.4.59 முற்பகல் 9.30 மணிவரையும் ரூபா 6,000 த்திற்கும், மேற்படவும் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரரிடம் இருந்து நாலந்தை நீர்ப்பாசன கந்தோரின் கீழிருக்கும் வெள்ள நிவாரண திருத்தியமைப்பு வேலையில் விலத்தவ அனிகற் (Villatawa Anicot) இதற்குக் கேள்விப் பத்திரங்கள் ஏற்பார். கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இதற்குத் தேவையான விபரங்கள் யாவும் நீர்ப்பாசன அதிபர் நாலந்தைக் கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் 15.4.59 இருந்து 20.4.59 வரையும் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் இந்த நீர்ப்பாசன இலாகாவில் பதிவு பெற்ற கொந்தருத்துக்காரருக்கே வளங்கப்படும். பதிவுப் புத்தகங் களை வேண்டிய நேரங்களில் பார்வைக்குக் கொடுக்க வேண்டும். கேள்விப் பத்திரங்கள் வழங்குமுன் விண்ணப்பம் செய்வோர் ரூபா 25 பிணைப் பணமாகக் கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இதோடு விண்ணப்பம் செய்வோர் கவுன்மேந்தில் வேறு வேலைகள் செய்பவராக விருந்தால் அவ் வேலைகள் திருப்திகரமாக நடப்பதெனச் சாட்சிப் பத்திரங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் கண்டி மாவட்ட அதிபர் கந்தோரில் 22.4.59. முற்பகல் 10 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் சமுகம் வேண்டுமென விரும்புவோர் அனுமதிக்கப்படுவர்.

த. வே. தருமலிங்கம்,
நீர்ப்பாசன அதிபர்,
நாலந்தைப் பகுதி.

நீர்ப்பாசன கந்தோர்.
1.4.59.

---

### நீர்ப்பாசனப் பகுதி

வடகிழக்குப் பகுதி பொலன்னறுவை நீர்ப்பாசன இஞ்ஜினியர் அவர்களால் மின்னேரியா உப பகுதியின் கீழ் உள்ள மின்னேரியா ஸ்கீமைச் சேர்ந்த எலாகெர, மின்னேரிய, யோதஉல குளக்கட்டு ரோட்டு 14 ம், 15 ம், 16 ம் கட்டைகளுக்கு கல்லும்-தாரும் போடுவதற்காக கேள்விகள் 1959 ம் ஆண்டு சித்திரை மாதம் 22 ம் திகதி (22-4-59) புதன்கிழமை, முற்பகல் 9.30 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

(2) கேள்விகள் மின்னேரியா உப பகுதி நீர்ப்பாசன இஞ்ஜினியரிடம் இருந்து பெறக்கூடிய பத்திரங்களில் இரட்டைப் பிரதியில் அனுப்பப்பட வேண்டும், ஏனைய விபரங்களையும் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள லாம்.

(3) கேள்விப் பத்திரங்களை மின்னேரியா உப பகுதி நீர்ப்பாசன இஞ் ஜினியர் அவர்களிடம் இருந்து 1959 ம் ஆண்டு சித்திரை மாதம் 15ம் திகதியில் (15-4-59) இருந்து சித்திரை மாதம் 20 ம் திகதி (20-4-59) வரையும் வழங்கப்படும்.

(4) கேள்விப் பத்திரங்கள் இந்த இலாகாவில் ரூபா 45,000 க்கும் அதற்குமேலும் பதிவு செய்தோருக்கு மாத்திரம் வழங்கப்படும்.

(5) விண்ணப்பக்காரர்கள் கேள்வி ஒவ்வொன்றுக்கும் ரூபா 50 ஐ வைப்புப் பணமாக உப பகுதி நீர்ப்பாசன இஞ்ஜினியரிடம் கட்ட வேண் டும்.

(6) எதுவித ஆயுதங்களும் இவ்விலாகாவால் வழங்கப்படமாட்டாது.

நீர்ப்பாசன இஞ்ஜினியர்,
மின்னேரியா உப பகுதி.

நீர்ப்பாசன கந்தோர்,
கிரித்தலை,
1959 ம் ஆண் ஏப்ரில் மீ 1 ந் டீ.

## வித்தியா பகுதி

### " கெயர் " மா 50 இருத்தல் மூடைகளை பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரிகளின் விநியோக நிலையங்களிலிருந்து அவ்வப்பகுதிப் பாண்காரர்களுக்கு ஏற்றிக்கொண்டுபோய் கொடுத்தற்கான ஒப்பந்தக் கேள்விப் பத்திரம்

மேற்குறித்த சேவைக்கான ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்களை, மட்டக்களப்பு வித்தியா கந்தோர் கேள்விச்சபைத் தலைவர் 1959 ம் ஆண்டு ஏப்பிரில் மாதம் 24 ந் திகதி அன்று மு. ப. 9.30 மணிவரை ஏற்றுக்கொள்வார். இவை இரட்டைப்பிரதியில் தயாரிக்கப்பட்டு காகித உறையில் வைத்து மெழுகு வார்த்து முத்திரை இட்டு அனுப்பப்பட வேண்டும்.

2. இதற்கென விசேடபத்திரங்கள் இடையா. கேள்விப்பத்திரங்கள் அனுப்பவிரும்புவோர் ஒரு 50 ருத்தல் மூடைக்கு (அ) மட்டக்களப்பு நகரப்பகுதிக்குள் இன்ன வீதம் எனவும் (ஆ) நகரப்பகுதி தவிர்ந்த ஏனைய இடங்களுக்கு ஒரு மையிலுக்கு இன்ன வீதம் எனவும் ஒப்பந்த கேள்விப் பத்திரத்தில் குறித்துச் சமர்ப்பிக்கவேண்டும். மட்டக்களப்பில் உள்ள பிரதி உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரியின் விநியோக நிலையத்திலிருந்து அப்பகுதியில் உள்ளவர்களுக்கும் மேற்படி விநியோக நிலையத்தால் மா வளங்கப்படுபவர்களுமான பாண்காரர்களுக்கு மாவை ஏற்றிக்கொண்டுபோய்க் கொடுக்கவேண்டும். சராசரி மாதம் ஒருமுறை மா ஏற்றிச்செல்லப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

3. தெரிவுசெய்யப்படும் ஒப்பந்தக்காரர்கள் மா மூடைகளை ஏற்றிக் கொண்டுபோய்க் கொடுக்கும்படி வித்தியாதிகாரியிடமிருந்து கட்டளை கிடைத்த மூன்று நாட்களுக்குள் அங்ஙனம் செய்யவேண்டும்.

4. ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்களில் யாதேனும் திருத்தங்கள் செய்யப்படின் அல்லது அழிக்கப்பட்டு புதிதாக யாதேனும் இடப்படின் அவற்றிற்கு பக்கத்தில் ஒப்பந்தக்காரன் தனது முதலெழுத்தொப்பத்தை இடவேண்டும்.

5. தெரிவு செய்யப்படும் ஒப்பந்தக்காரர் தனது ஒப்பந்தத்தை செவ்வனே நடாத்திமுடிக்க 500 ரூபா பிணைப்பணமாக கச்சேரியில் கட்ட சித்தமாய் இருக்கவேண்டும்.

6. ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படுதற்கான கடைசித் திகதியிலிருந்து 3 மாதகாலம்வரை எத்தருணத்திலேனும் ஒப்பந்தக் கேள்விப் பத்திரம் ஏற்கப்படுவதற்கு விண்ணப்பக்காரர் இணங்க வேண்டும்.

7. ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்களில் எவற்றையேனும் அல்லது எல்லாவற்றையும் ஏற்காது விடுதற்கும் குறித்த ஒரு ஒப்பந்தக் கேள்விப்பத்திரத்தை ஒரு பகுதியளவில் ஏற்பதற்கும் அரசாங்கத்திற்கு உரிமையுண்டு.

8. வித்தியாதிகாரியுடன் செய்துகொள்ளப்படவேண்டிய ஒப்பந்தத்தில் ஒட்டவேண்டிய முத்திரைகளை தெரிவுசெய்யப்படும் ஒப்பந்தக்காரர்களே கொடுக்கவேண்டும்.

9. ஏற்கப்படும் ஒரு ஒப்பந்தத்தை கேள்விச்சபையில் அனுமதியின்றி ஒப்பந்தக்காரன் இன்னொருவர் பெயரில் மாற்றவேனும் அல்லது அதிற் குறிப்பிட்ட வேலையை இன்னொருவரால் செய்விக்கவேனும் முடியாது. ஒரு ஒப்பந்தக்காரன் தான் செய்துகொண்ட ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு இன்னொருவருக்கு அளிக்கும் தத்துவத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தற்கு அரசாங்கத்திற்கு உரிமை உண்டு.

10. அரசாங்கத்துடன் முன்னர் எத்தருணத்திலும் ஒப்பந்தம் செய்யாதோர் இதற்கு மனுச்செய்யுமிடத்து தமது முழுப்பெயர், தற்போதய விலாசம், எந்த டிஸ்திறிக்கில் அவருக்கு ஆதனம் இருக்கின்றதென்றும் அவற்றின் தன்மை, பரப்பு ஆகிய விபரங்களைக்கொண்ட ஓர் அறிக்கையை எழுத்துமூலம் சமர்ப்பிக்கவேண்டும்.

11. அரசாங்க ஒப்பந்தங்களை இதற்குமுன் நிறைவேற்றியவர்கள் தாம் எப்பகுதிக்கென எந்த டிஸ்திறிக்கில் சேவை புரிந்தவர்கள் எனக்குறிப்பிடவேண்டும்.

12. அரசாங்கத்துக்காக அரசாங்கத்தின் சார்பில் கடைமையாற்றும் வித்தியாதிபதியுடன் ஒப்பந்தக்காரன் ஒப்பந்தம் செய்யவேண்டும். இப் பதவிப்பெயர் இப்பொழுது அரசாங்கத்தின் கீழ் அக்கடமையாற்றும் உத்தியோகத்தரையும், அவர்பின் அக்கடமை வகுப்போரையும் கருதும்.

13. தெரிவுசெய்யப்படும் ஒப்பந்தக்காரன் தான் வித்தியாதிகாரிக்கு சமர்ப்பிக்கும் வவுச்சர்கள் பிறசாதனங்கள் ஆகியவற்றில் கொடுக்கும் விபரங்கள் சரியாகக்கொடுப்பதற்குப் பொறுப்பாகக் கருதப்படுவர்.

14. கேள்விப்பத்திரங்கள் கொண்ட உறைகளில் மட்டக்களப்பில் " கெயர் " மா வினியோகிப்பதற்கான கேள்விப்பத்திரம் என இடதுபக்க தபால் உறையில் எழுதப்படவேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் கேள்விப்பத்திரங்கள் பதிவுசெய்யப்பட்ட தபாலில் அனுப்புதல் வேண்டும். பதிவு தபால் மூலம் அனுப்பாத உள்ளூர் விண்ணப்பகாரர்கள், தங்கள் கேள்விப்பத்திரங்களை, கல்வி அதிகாரியின் கந்தோரில் இதற்கென வைக்கப்பட்டிருக்கும் பெட்டிகளிற் போடுதல் வேண்டும்.

15. ஒப்பந்தக்கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்படும் வித்தியாதிகாரியின் கந்தோரில் 25.4.59 அன்று மு. ப. 9.30 மணிக்குத் திறக்கப்படும்.

16. ஒப்பந்தக்கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் நேரத்தில் விண்ணப்பக்காரர் பிரசன்னமாயிருக்கலாம். பிரசன்னமாயிருக்கும் விண்ணப்பகாரர்கள் முன்னிலையில் விண்ணப்பகாரர்களின் பெயர்களும் விகிதங்களும் வாசிக்கப்படும். ஒப்பந்தக் கேள்விப் பத்திரத்தை பரிசீலனை செய்யவிரும்பும் எவ்விண்ணப்பகாரரும் கேள்விச்சபைத்தலைவருடன் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட கேள்விச் சபைத்தலைவருடன் அல்லது அவரால் ஒழுங்கு செய்துகொள்ளின் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தக்கேள்விப்பத்திரங்களின் பிரதியை பரிசீலனை செய்ய அனுமதிக்கப்படுவர்.

சி. தணிகாசலம்,
பதில் வித்தியாதிகாரி,
கீழ் மாகாணம்.

---

## வித்தியா பகுதி

### " கெயர் " மா 50 இருத்தல் மூடைகளை பிரதி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியின் விநியோகநிலையங்களிலிருந்து அவ்வப்பகுதிப் பாண்காரர்களுக்கு ஏற்றிக்கொண்டுபோய் கொடுத்தற்கான ஒப்பந்தக் கேள்விப் பத்திரம்

மேற்குறித்த சேவைக்கான ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்களை, மட்டக்களப்பு வித்தியா கந்தோர் கேள்விச் சபைத் தலைவர் 24.4.59 ம் திகதி அன்று மு. ப. 9.30 மணிவரை ஏற்றுக்கொள்வார். இவை இரட்டைப் பிரதியில் தயாரிக்கப்பட்டு காகித உறையில் வைத்து மெழுகு வார்த்து முத்திரையிட்டு அனுப்பப்படவேண்டும்.

2. இதற்கென விசேட பத்திரங்கள் கிடையா. கேள்விப்பத்திரங்கள் அனுப்ப விரும்புவோர் ஒரு 50 இருத்தல் மூடைக்கு கீழே குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் இன்ன வீதம் என ஒப்பந்தக் கேள்விப்பத்திரத்தில் குறித்துச் சமர்ப்பிக்கவேண்டும். திருகோணமலையில் பிரதி உணவுக்கட்டுப்பாட்டதிகாரியின் விநியோகநிலையத்திலிருந்து அப்பகுதியில் உள்ளவர்களுக்கும் மேற்படி விநியோகநிலையத்தால் மா வழங்கப்படுபவர்களுக்குமான பாண்காரர்களுக்கு மாவை ஏற்றிக்கொண்டுபோய்க் கொடுக்கவேண்டும். சராசரி மாதம் ஒருமுறை மா ஏற்றிச் செல்லப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

3. தெரிவுசெய்யப்படும் ஒப்பந்தக்காரர்கள் மா மூடைகளை ஏற்றிக் கொண்டுபோய்க கொடுக்கும்படி வித்தியாதிகாரியிடமிருந்து கட்டளை கிடைத்த மூன்று நாட்களுக்குள் அங்ஙனம் செய்யவேண்டும்.

4. ஒப்பந்தக்கேள்விப்பத்திரங்களில் யாதேனும் திருத்தங்கள் செய்யப்படின் அல்லது அழிக்கப்பட்டு புதிதாக யாதேனும் இடப்படின் அவற்றிற்குப் பக்கத்தில் ஒப்பந்தக்காரன் தனது முதலெழுத்தொப்பத்தை இடவேண்டும்.

5. தெரிவு செய்யப்படும் ஒப்பந்தகாரர் தனது ஒப்பந்தத்தை செவ்வனே நடாத்திமுடிக்க ரூபா 500 பிணைப்பணமாக கச்சேரியில் கட்ட சித்தமாய் இருக்கவேண்டும்.

6. ஒப்பந்தக்கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படுதற்கான கடைசித்திகதியிலிருந்து 3 மாதகாலம்வரை எத்தருணத்திலேனும் ஒப்பந்தக்கேள்விப்பத்திரம் ஏற்கப்படுவதற்கு விண்ணப்பக்காரர் இணங்கவேண்டும்.

7. ஒப்பந்தக்கேள்விப்பத்திரங்களில் எவற்றையேனும் அல்லது எல்லாவற்றையும் ஏற்காது விடுதற்கும் குறித்த ஒப்பந்தக்கேள்விப்பத்திரத்தை ஒரு பகுதியளவில் ஏற்பதற்கும் அரசாங்கத்திற்கு உரிமை உண்டு.

8. வித்தியாதிகாரியுடன் செய்துகொள்ளப்படவேண்டிய ஒப்பந்தத்தில் ஒட்டவேண்டிய முத்திரைகளை தெரிவுசெய்யப்படும் ஒப்பந்தக்காரர்களே கொடுக்கவேண்டும்.

9. ஏற்கப்படும் ஒரு ஒப்பந்தத்தை கேள்விச்சபையில் அனுமதியின்றி ஒப்பந்தக்காரன் இன்னொருவர்பெயரில் மாற்றவேனும் அல்லது அதிற் குறிப்பிட்ட வேலையை இன்னொருவரால் செய்விக்கவேனும் முடியாது. ஒரு ஒப்பந்தகாரன் தான் செய்துகொண்ட ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு அளிக்கும் தத்துவத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தற்கு அரசாங்கத்திற்கு உரிமையுண்டு.

10. அரசாங்கத்துடன் முன்னர் எத்தருணத்திலும் ஒப்பந்தம் செய்யாதோர் இதற்கு மனுச்செய்யுமிடத்து தமது முழுப்பெயர், தற்போதய விலாசம், எந்த டிஸ்ரிக்கில் அவருக்கு ஆதனம் இருக்கின்றதென்றும் அவற்றின் தன்மை, பரப்பு ஆகிய விபரங்களைக்கொண்ட ஓர் அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

11. அரசாங்க ஒப்பந்தங்களை இதற்குமுன் நிறைவேற்றியவர்கள் தாம் எப்பகுதிக்கென எந்த டிஸ்ரிக்கில் சேவைபுரிந்தவர்கள் எனக் குறிப்பிடவேண்டும்.

12. அரசாங்கத்துக்காக அரசாங்கத்தின் சார்பில் கடைமையாற்றும் வித்தியாதிபதியுடன் ஒப்பந்தகாரன் ஒப்பந்தம் செய்யவேண்டும். இப்பதவிப்பெயர் இப்பொழுது அரசாங்கத்தின் கீழ் அக்கடமையாற்றும் உத்தியோகத்தரையும், அவர்பின் அக்கடமை வகிப்போரையும் கருதும்.

13. தெரிவுசெய்யப்படும் ஒப்பந்தகாரன் தான் வித்தியாதிகாரிக்குச் சமர்ப்பிக்கும் வவுச்சர்கள், பிறசாதனங்கள் ஆகியவற்றில் கொடுக்கும் விபரங்கள் சரியாகக் கொடுப்பதற்குப் பொறுப்பாகக் கருதப்படுவர்.

14. கேள்விப்பத்திரங்கள் கொண்ட உறைகளில் திருகோணமலையில் " கெயர் " மா விநியோகிப்பதற்கான கேள்விப்பத்திரம் என இடது பக்க தபால் உறையில் எழுதப்படவேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் கேள்விப்பத்திரங்கள் பதிவு செய்யப்பட்ட தபாலில் அனுப்புதல் வேண்டும். பதிவுதபால் மூலம் அனுப்பாத விண்ணப்பக்காரர்கள் தங்கள் கேள்விப்பத்திரங்களை கல்வி அதிகாரியின் கந்தோரில் இதற்கென வைக்கப்பட்டிருக்கும் பெட்டிகளில் போடுதல் வேண்டும்.

15. ஒப்பந்தக்கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்படும் வித்தியாதிகாரியின் கந்தோரில் 24.4.59 அன்று மு. ப. 9.30 மணிக்குத் திறக்கப்படும்.

16. ஒப்பந்தக்கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் நேரத்தில் விண்ணப்பக்காரர் பிரசன்னமாக இருக்கலாம். பிரசன்னமாயிருக்கும் விண்ணப்பகாரர்கள் முன்னிலையில் விண்ணப்பகாரர்களின் பெயர்களும் விதிதங்களும் வாசிக்கப்படும் ஒப்பந்தக் கேள்விப்பத்திரத்தை பரிசீலனை செய்யவிரும்பும் எவ்விண்ணப்பக்காரரும் கேள்விச்சபைத் தலைவருடன் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட கேள்விச் சபைதலைவரும் அல்லது அவரால் ஒழுங்கு செய்து கொள்ளின் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்களின் பிரதியை பரிசீலனை செய்ய அனுமதிகப்படுவர்.

சி. தணிகாசலம்,
பதில் வித்தியாதிகாரி.
கீழ் மாகாணம்.

**அட்டவணை**

மூதூர் பாதை—

1. (அ) திருகோணமலை விநியோகநிலையத்தியிலிருந்து, மூதூர் துறைவரை வத்தைக் கட்டணமுள்பட————ஒரு 50 இருத்தல் மூடைக்கு.

(ஆ) மூதூர் துறையிலிருந்து மூதூரிலுள்ள பாண் போறணைகாரர்களுக்கு————ஒரு 50 இருத்தல் கொண்ட மூடைக்கு.

(இ) மூதூரிலிருந்து ஈச்சிலம்பத்தை, கிளிவெட்டி, தோப்பூர்——————ஒரு 50 இருத்தல் மூடைக்கு ஒரு மைலுக்கு.

2. **கோமறங்கடவெல**
————ஒரு 50 இருத்தல் மூடைக்கு ஒரு மைலுக்கு.

3. **திருகோணமலை நகரப்பகுதி**
————ஒரு 50 இருத்தல் மூடைக்கு.

4. **தம்பலகாமம், கந்தளாய், நிலாவெளி**
————ஒரு 50 இருத்தல் மூடைக்கு ஒருமைலுக்கு.

5. **குச்சவளி, புல்மோட்டை**
————ஒரு 50 இருத்தல் மூடைக்கு ஒரு மைலுக்கு.

6. **சீனன்வாடி, கிண்ணியாய்**
————ஒரு 50 இருத்தல் மூடைக்கு ஒரு மைலுக்கு.

7. **ஈச்சிலம்பத்தை, கூனித்தீவு, கிளிவெட்டி, தோப்பூர்**
————ஒரு 50 இருத்தல் மூடைக்கு ஒரு மைலுக்கு.

## இலங்கை அரசாங்க புகையிரதப் பகுதி

**விற்பனைக்குரிய மண்ணும் பழைய ஓடுகளும்**

மருதானை மைக்கலம் வீதியிலுள்ள புகையிரதப்பகுதிப் பிரதான பொறியியலாளர் கந்தோருக்கு அண்மையில் ஏறக்குறைய 45,000 பழைய அரைவட்ட நாட்டு ஓடுகளும், 250 கீப் மண்ணும் பெறுவதற்கு உரிய ஒப்படைக்கேள்விகள், 17.4.59 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி வரை இதன் கீழ் கையொப்பம் இட்டிருப்பவரால் ஏற்றுக்கொள்ளப்படும். சித்திபெறும் கேள்விப்பத்திரத்தையுடையவருக்கு அவரது கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டதென்று அறிவித்தவுடனே அவர் குறிப்பிட்ட முழுத்தொகையையும் கட்டுவதற்கு ஆயத்தமாக இருப்பதோடு குறிப்பிட்ட பொருள்களையும் ஒரு கிழமைக்குள் அப்புறப்படுத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரத்தில் தனித்தனி ஒரு கீப் மண்ணுக்கும் (ஆயிரம்) ஓடுகளுக்கும் ஆகிய கிரயங்களையே குறிப்பிடல்வேண்டும்.

ஒவ்வொரு கேள்விப்பத்திரதாரரும் ரூபா 25 அடைக்கலப்பணமாகக் கட்டுதல் வேண்டும். இவ்வடைக்கலப்பணத்தை மருதானை, புகையிரதப் பகுதிப் பிரதான கணக்காளரிடமோ, அல்லது எந்தப் புகையிரத நிலையத்திலோ கட்டி, பற்றுச்சீட்டுப் பெற்று, அதையே கேள்விப்பத்திரத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். வேறெது விதத்திலும் பணம் அனுப்பப்பட்டால் அங்கீகரிக்கப்படமாட்டாது.

ச. இ. அருளம்பலம்,
புகையிரதப் பகுதி மத்திய மாவட்டப்
பொறியியலாளர், தெமற்றக்கொடை.

புகையிரதப் பகுதி மத்திய மாவட்டப்
பொறியியலாளர் கந்தோர்,
கொழும்பு 9,
1.4.59.

## மதுவரிப் பகுதி

**சாராயத்தைப் போத்தல்களில் அடைப்பதற்கு கேள்விப்பத்திரங்கள்**

கீழ் குறிக்கப்பட்டிருக்கும் சாராயக்குதங்களில் ஒன்றினிலோ அல்லது அதிகமானவற்றினிலோ ஒருவருட காலத்திற்கு சாராயத்தைப் போத்தல்களில் அடைப்பதற்கு உள்நாட்டு விவசாய அமைச்சுப் பகுதியின் கேள்விப்பத்திர சபைத் தலைவரால் 1959 ம் ஆண்டு சித்திரை மாதம் (ஏப்ரல்) 30 ந் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிவரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| மட்டக்களப்பு<br>வதுளை | 1959 ம் ஆண்டு ஆடி (ஜுலை) மாதம் 1 ந் திகதி தொடக்கம் |
| களுத்துறை<br>கண்டி<br>யாழ்ப்பாணம் | 1959 ம் ஆண்டு ஆவணி (ஆகஸ்ட்) மாதம் 1 ந் திகதி தொடக்கம் |
| நீர்கொழும்பு<br>திருகோணமலை | 1959 ம் ஆண்டு புரட்டாதி (செப்டெம்பர்) மாதம் 1 ந் திகதி தொடக்கம் |

2. மதுவரி அதிகாரியின் காரியாலயத்திலிருந்து பெறக்கூடிய கேள்விப்பத்திரங்களிலேயே விண்ணப்பிக்க வேண்டும். இது சம்பந்தமான சகல விபரங்களையும் மதுவரி அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ரி. பி. வடுகொடபிற்றியா,
மதுவரி அதிகாரி.

மதுவரி அதிகாரியின் காரியாலயம்,
கொழும்பு, சித்திரை (ஏப்ரல்) 4, 1959.

# கேள்விப்பத்திர முடிவுகள்பற்றிய அறிவித்தல்கள்

## நீர்ப்பாசனத்துறை

**முற்றும் அலுமினியத் தகடுகளால் அமைக்கப்பெற்ற 25 கட்டிடங்கள் கொள்வதற்கான கேள்விகளின் முடிவு**

**உள்நாட்டுக் கேள்விக்காரர்கள்**

(1) மெசேர்ச் வில்லியம் ஜேக்ச் அன்ட் கோ லிமிற்ரெட்
(2) மெசேர்ச் பிறவுண் அன்ட் கோ லிமிற்ரெட்
(3) மெசேர்ச் சாமுவேல் சன்ச் அன்ட் கோ லிமிற்ரெட்
(4) மெசேர்ச் அங்கிளோ எசியன் கொம்பனி லிமிற்ரெட்
(5) மெசேர்ச் மக்லூட் லிமிற்ரெட்
(6) மெசேர்ச் எதிரிசிங் கொம்பைன்

**வெளிநாட்டுக் கேள்விக்காரர்கள்**

(7) மெசேர்ச் பெல்மன் கங்கர் யூ.கே.
(8) மெசேர்ச் சரேறு சறக்சர் லிமிற்ரெட் யூ.கே.
(9) மெசேர்ச் சன்டேர்ச் அன் வோச்றற் யூ.கே.
(10) மெசேர்ச் நிசன் பில்டிங்ச் யூ.கே.
(11) மெசேர்ச் ஆர்.ஓ.றைற் யூ.கே.
(12) மெசேர்ச் விக்சர் ஆம்ச்ரோங் யூ.கே.
(13) மெசேர்ச் வீ.ஐ.எ. லிமிற்ரெட் அவுஸ்திரேலியா
(14) மெசேர்ச் விறச்சீல் கோப் அவுஸ்திரேலியா
(15) மெசேர்ச் லொக்மேம் அன்ட் கோ மேற்கு ஜேர்மனி
(16) மெசேர்ச் சோசியற்ரு எ.இ. இத்தாலி
(17) மெசேர்ச் இ.சி.சி. ஐக்கிய அமெரிக்கா
(18) மெசேர்ச் எவ். விலொயிட் எவ்.எஸ்.எ. பிரான்ச்
(19) மெசேர்ச் அகோமல் பெல்ஜியம்
(20) மெசேர்ச் என். வீ. நேதால் மெற்றல் இண்டசிரீக், பொலிநோம், ஒல்லாந்து
(21) மெசேர்ச் பெயர்லயின் என்ஜினியரிங் கோ யூ.கே.
(22) மெசேர்ச் கோமர் கொன்ச்ரன்ரைன் கோ யூ.கே.

முடிவு

முற்றும் அலுமினியத் தகடுகளால் அமைக்கப்பெற்ற 25 கட்டிடங்களுக்கான கேள்விகளின் முடிவு ; மெசேர்ச் என். வீ. நேதால் மெற்றல் இண்டச்ரீக், பொலிநோம், ஒல்லாந்து அவர்களின் கேள்விப்படி ரூபா 236,600 சி.ஐ.எவ், கொழும்பு, ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ரீ. பீ. ஈ. செனிவிரத்தின,
நீர்ப்பாசன அதிபருக்கா.

நீர்ப்பாசனத்துறை, கொழும்பு,
1959 ம் ஆண்டு பங்குனி மீ 10 ந் உ.

---

## நீர்ப்பாசனத்துறை

### 35 மின்சார சக்தி இயக்கும் இயந்திரங்கள் (Generating Sets) கொடுப்பதற்கான கேள்விகளின் முடிவு

உள் நாட்டுக் கேள்விக்காரர்கள்

1. மெசேர்ச் டிமோ எஜென்சீஸ் லிமிற்ரெட்
2. ,, அப்துல் காதர் ரவுதர் அன்ட்கோ லிமிற்ரெட்
3. ,, அங்கிலோ எசியன் கோ லிமிற்ரெட்
4. ,, பிறவுன் அன்ட் கோ லிமிற்ரெட்
5. ,, சி. எவ். ரி. என்ஜினியரின் லிமிற்ரெட்
6. ,, வில்லியம் ஜேக்ச் அன்ட் கோ (சிலோன்) லிமிற்ரெட்
7. ,, கோறேஸ் (சிலோன்) லிமிற்ரெட்
8. ,, துரை அருள் அன்ட் கோ லிமிற்ரெட்
9. ,, புறூடன்பேர்க் அன்ட் கோ லிமிற்ரெட்
10. ,, கரிசன் லிச்ரர் என்ஜினியரிங் லிமிற்ரெட்
11. ,, வோக்கர் அன்ட் கிரீக் லிமிற்ரெட்
12. ,, யூனைற்ரெட் திருக்ரர் அன் இக்குப்மென்ற் லிமிற்ரெட்
13. ,, கோபோக் அன்ட் கோ
14. ,, கொழும்பு கொமேர்சல் கோ லிமிற்ரெட்
15. ,, பிளைக்வூட் கொட்ஜ்
16. ,, வோக்கர் சன்ஸ் அன்ட் கோ லிமிற்ரெட்
17. ,, இக்குப்மென்ற் அன்ட் கொன்சரக்கன் அன்ட் கோ
18. ,, நிப்பன் கொழும்பு ரேடிங்க் கோ
19. ,, குடார்த் அன்ட் சை " சிலோன் "
20. ,, பவுச் ரீட்ச் (இ அன்ட் சி) சிலோன் லிமிற்ரெட்
21. ,, சிலோன் சேவிசர்க் அன்ட் சப்ளை கோ லிமிற்ரெட்
22. ,, ரேருச் அன்ட் ரேருச்
23. ,, வல்கன் அன்ட் கோ
24. ,, மெற்ரோ என்ஜினியர்ச்
25. ,, பெறேரு பிறதர்ச்

வெளிநாட்டு கேள்விக்காரர்கள்

26. மெசேர்ச் மெக் ரென் என்ஜினியரிங்க் புறடக்ச் கோ கனடா
27. மக்சின் எக்ச்போற் யூ. எச். எச். ஆர்.
28. பீபிள்ச் ரிபப்பிக் ஒவ் சைனு
29. ஸ்ரீல் புறடக்ச், யூ. கே.
30. மெசேர்ச் ஒ. எம். மிலான்—மிலானே
31. ரெனுஸ்ட்சன் ரிவ்வெற்—அவுஸ்திரேலியா
32. மெசேர்ச் ரூவும்பா விடி பிறி–அவுஸ்திரேலியா
33. ,, காக்லண்டச்—சுவீடன்
34. ,, உவக் கொக்கி லிமிற்ரெட்—ஜப்பான்
35. ,, வின்ட் பவர் மனுவக்சரிங்க் கோ யூ. எஸ். ஏ.
36. ,, கில்பேற் ஜே. மக். கோல்—லண்டன்
37. ,, லின்டெற்றீவ்ச் என். வீ. —ஒல்லாந்து
38. ,, அரேருே—இத்தாலி
39. ,, இருத் எற். சீ.—பிரான்சு
40. ,, கிரும் புற்றிக்—இங்கிலாந்து
41. கம்சன் இண்டஸ்ரீஸ்—யூ. கே.
42. மெசேர்ச் பெலோபேன் என்ஜின்ஸ் லிமிற்ரெட்—இங்கிலாந்து
43. ,, எலின்—பெயின்
44. கன்சா கம்பேர்ச்
45. மெசேர்ச் மொடேர்ன் அக்றிகல்சறல் கோ யூ. எஸ். ஏ.
46. ,, பாசந்து அன்ட் கோனேன்காம்ப்—பிறேமான்
47. ,, கின்டடித், ஒல்லாந்து

பிந்திய கேள்விக்காரர்கள்

1. மெசேர்ச் எஸ்ரபிளிஸ்மென்ற் ஜே. கார்டீ.
2. எச். ஐ. எம். பீ. ஏ.—மிலான்
3. மெசேர்ச் அனத்
4. ,, ரெறி மெசினரீ கோ லிமிற்ரெட்
5. ,, சோசியற்ரு டீ. கொன்ச் டீமெற்றியல்ஸ் டீ. சேவிற்றியூட்

முடிவு :

**முதலாவதின் முடிவு :**

12 மின்சாரசக்தி இயக்கும் இயந்திரம் : 6 கே. வி. ஏ. ; மெசேர்ச் கே. என். ஏ. சி. ரவுதர் அன்ட் கோ அவர்களின் கேள்விப்படி, ரூபா. 63,470.76, சி.ஐ. எவ். கொழும்பு, ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**இரண்டாவதின் முடிவு :**

15 மின்சார சக்தி இயக்கும் இயந்திரம் : 12 கே. வி. ஏ. ; மெசேர்ச் அங்கோ ஏசியன் கோ லிமிற்ரெட் அவர்களின் கேள்விப்படி ரூபா 140,400, சி. ஐ. எவ். கொழும்பு, ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**மூன்றாவதின் முடிவு :**

8 மின்சார சக்தி இயக்கும் இயந்திரம் : 30 கே. வி. ஏ. ; மெசேர்ச் கம்சம் இண்டஸ்ரீஸ், யூ. கே. அவர்களின் கேள்விப்படி பவுண் 6,020—0—0, சி. ஐ. எவ். கொழும்பு, ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ரீ. பீ. ஈ. செனிவிரத்தின,
நீர்ப்பாசன அதிபருக்காக.

நீர்ப்பாசனத்துறை,
கொழும்பு, 1959 ம் ஆண்டு மார்ச் மீ 23 ந் உ.

---

## விளம்பரம்

1959 ம் ஆண்டு சித்திரை (ஏப்றில்) மாதம் 14 ந் திகதி செவ்வாய்க்கிழமை அரசாங்க விடுமுறைநாளாக விருப்பதனை முன்னிட்டு, 1959 ம் ஆண்டு சித்திரை (ஏப்றில்) மாதம் 17 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படவேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1959 ம் ஆண்டு சித்திரை (ஏப்றில்) மாதம் 13 ந் திகதி திங்கட்கிழமை பி. ப. 4 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்து சேரவேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1959 ம் ஆண்டு பங்குனி (மார்ச்) மீ 26 ந் உ.

பேர்னுர்ட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.